TNVR090004022019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை .. திரு. R.V. ராஜகுமார், B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.

2024-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15-ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண். 2/2023
இன்
முதலேற்பு வழக்கு எண்.102/2019

1. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்,
   அதன் சில்லறை விற்பனை மேலாளர்,
   மதுரை மூலமாக.

2. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்,
   தலைமைக்கோட்ட சில்லறை விற்பனை மேலாளர்,
   மதுரை.

... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1. சக்திவேல்ராஜா
2. S, ராஜம் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு 02.12.2023 அன்று இறுதியான விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S.S. கணேசன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

உத்தரவு

இம்மனுவானது எதிர்மனுதாரர்களது வங்கி கணக்கு எண், கிளை, IFSC code, வங்கி பெயர் போன்றவற்றை பற்றிய விபரங்களை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம் :–**

மேற்படி மனுதாரர் அ.வ.எண்.102/2019–ல் பிரதிவாதி மற்றும் அ.வ.எண். 194/2022–ல் வாதி ஆவர். மேற்படி எதிர்மனுதாரர்கள் மேற்படி மனுதாரர்களுக்கு எதிராக தாவா சொத்திலிருந்து மனுதாரர்களை வெளியேற்றி சுவாதீனத்தை ஒப்படைக்கக்கோரியும், வாடகை நிலுவைத் தொகை ரூ.18,422/– செலுத்தக்கோரியும், குத்தகைக்காலம் முடிந்ததிலிருந்து சுவாதீனத்தை ஒப்படைக்கும் வரை சேதாரமாக மாதம் ரூ.10,000/–த்தை கொடுக்கக்கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உண்மையில் மேற்படி குத்தகைக்காலம் 17.06.2031 வரையுள்ளது. எனவே, குத்தகை முடிவுற்றது என்ற கேள்வியே எழவில்லை. மேற்படி எதிர்மனுதாரர்கள், மனுதாரர்களிடம் தவறாமல் வாடகை செலுத்தி வந்த கணக்கை முடித்து விட்டனர். அதன்பின்னர் காசோலை மூலமாக அனுப்பியும் அது தொடர்ந்து வாங்க மறுத்து திருப்பப்பட்டது. இவ்வழக்கினை தாக்கல் செய்த பின்னரும் மனுதாரர்கள் நீதிமன்றத்தில் வாடகையை வைப்பீடு செய்ய நடவடிக்கை மேற்கொண்டனர். மேற்படி எதிர்மனுதாரர்கள்/வாதிகள் வாடகை பெற்றுக்கொள்ள முதல்முறை ஒப்புக்கொண்டதால் D.D. மூலமாக செலுத்தினர். அதனை தொடர்ந்து மேற்படி எதிர்மனுதாரரிடம் வாடகை செலுத்துவதற்காக வங்கி கணக்கு அறிக்கையை தாக்கல் செய்யக்கோரி நமூனா தாக்கல் செய்யப்பட்டு அதை எதிர்மனுதாரர்கள் ஆட்சேபித்தது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

மத்திய அரசின் பெட்ரோலிய எண்ணெய் மற்றும் எரிவாயு துறையின் சட்டப்படியான அமைப்பாக இருப்பதால் அனைத்து எண்ணெய் விற்பனை நிறுவனங்களுக்கும், அனைத்து கட்டணங்களும், பரிவர்த்தனைகளும் ஆன்லைனில் மட்டுமே செய்ய வேண்டும் என்ற ஒரே மாதிரியான சுற்றறிக்கை இருக்கிறது. எனவே, அனைத்து பரிவர்த்தனைகளும் ஆன்லைன் மூலமே பணம் செலுத்தி வருகிறோம். எதிர்மனுதாரர் எனக்கு அறிவிப்போ, தகவலோ கொடுக்காமல் கணக்கை முடிக்கும் வரை எதிர்மனுதாரர்/வாதிக்கு கூட வாடகை அவரது வங்கி கணக்கில் RTGS/NEFT மூலமாக செலுத்தி வந்தோம்.

வாடகை தொகையை அவரது கணக்கில் செலுத்துவதற்கான கணக்கு விபரத்தை கார்ப்பரேஷனுக்கு வழங்காதது ஆச்சரியமானது. சட்டப்படியான அமைப்பாக இருப்பதால் வாடகை செலுத்துவதை எதிர்மனுதாரர் தடுக்க முடியாது. மாறாக, இது அனைத்து பரிவர்த்தனைகளுக்கும் ஒரே மாதிரியாக பின்பற்றப்படும் நடைமுறை மட்டுமே, அத்தகைய சந்தர்ப்பத்தில் எதிர்மனுதாரர் வேண்டுமென்றே தனது கணக்கில் வரவு வைப்பதற்காக கோரும் அவரது கணக்கு விபரத்தை எந்த அடிப்படையும் இல்லாமல் வழங்க மறுப்பது சட்டப்படியும், சங்கதிப்படியும் நீடிக்க முடியாதது. எனவே, ஒவ்வொரு மாதமும் மேற்படி எதிர்மனுதாரர் வாடகையை செலுத்தும் வகையில் விற்பனையாளர் குறியீடு உருவாக்கவும், நீதியின் நலனுக்காகவும் ஒரே மாதிரியான முறை பின்பற்றுவதாகவும், காகிதமற்ற பரிவர்த்தனையை ஊக்குவிப்பதற்கும் எதிர்மனுதாரர்/வாதி வங்கி கணக்கு எண், IFSC code ஆகியவற்றை கொடுக்க வேண்டியது அவசியமாகும். எனவே, மேற்படி எதிர்மனுதாரர் அவரது வங்கி கணக்கு எண், கிளை, IFSC code, வங்கி பெயர் போன்றவற்றை பற்றிய விபரங்களும் தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் :–</u>

மேற்படி எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கின் வாதிகள். பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி வழக்கானது 2019–ஆம் ஆண்டு மேற்படி பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தின் சுவாதீனப்பரிகாரம் கோரியும், வாடகை நிலுவைத்தொகை கோரியும், அதை பயன்படுத்தி தொழில் செய்யும் வகையிலும் சேதாரம் செலுத்தக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் எனது கூடுதல் நிரூபண வாக்மூலத்தை செய்து ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, பிரதிவாதிகளால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, தற்போது இவ்வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக போடப்பட்டுள்ளது. உண்மையில் இவ்வழக்கானது முடிவுறும் தருவாயில் உள்ளது.

ஏற்கனவே 21.04.2023–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் நமூனா தாக்கல் செய்து அதற்கு 26.04.2023–ஆம் தேதியன்று விபரமான விவரங்களுடன் ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த எதிருரையை ஒரு பாகமாக பாவித்துக்கொள்ள வேண்டும். இம்மனுவானது நிலைக்கத்தக்கதல்ல. இந்த இடைக்கால மனுவானது வாதிகளை அவர்களது வங்கி சேமிப்பு கணக்கு எண், கிளை, IFSC code, வங்கி பெயர் ஆகியவற்றை கோரி தாக்கல் செய்தது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

இந்த வழக்கானது உடைமை மற்றும் வாடகை பாக்கி மற்றும் பயன்பாட்டிற்கான சேதங்கள் ஆகியவற்றிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் பிராது மற்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்மந்தமாக மட்டுமே இவ்வழக்கின் நோக்கமாக இருக்க வேண்டும். அவ்வாறிருக்க வழக்கிற்கு அப்பாற்பட்டு இடைநிலை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ள முடியாதது என்பது சட்டத்தின் அடிப்படை விதி.

பிரதிவாதிகள் தங்கள் எதிர்வழக்குரையில் இது குறித்து எந்த பிரச்சனையையும் எழுப்பவில்லை.

வழக்கில் குறிப்பிடும் நிவாரணத்திற்கு அப்பால் இடைக்கால விண்ணப்பத்தில் ஏதேனும் நிவாரணம் வழங்குவது நிலைக்கத்தக்கதல்ல என்று கூறியுள்ள அத்தகைய நிவாரணங்களும் வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒரு இடைநிலை மனுவில் உள்ள பரிகாரமானது அசல் வழக்கில் கோரியுள்ள முக்கிய பரிகாரங்களுடன் ஒத்து போக வேண்டும் என்பது சட்டத்தின் அடிப்படை விதி. அத்தகைய பரிகாரம் பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கில் காணப்பட வேண்டும்.

இதன்கீழ் பின்வரும் முன் தீர்ப்புரைகள் நீதிமன்றத்தின் பார்வைக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

1. AIR 1958 Madras Page 287
2. India Law Library 253684 Madras High Court Dated 05.03.2017
3. India Law Library 229385 dated 31.01.2002 by Madras High Court CRP 3988 by 2001
4. 1991 (1) Law weekly page 564
5. 2017 Supreme Appeal Reporter 1075
6. India Law Library 1544108 Andhra Pradesh Dated 16.02.2020

1–ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்துடன் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும், வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போதும், நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யும் தேதி வரையிலான காலத்தை அத்தகைய விபரங்களுடன் ஒரு கணக்கீட்டுத்தாள் தாக்கல் செய்யப்பட்டது. அந்த கணக்கீட்டு தாளின் படி மார்ச் 22 வரையிலான வாடகை பாக்கி 38 மாதங்களுக்கானது. அதன்பின் விருதுநகர் ஸ்டேட் பேங்க்

ஆப் இந்தியா 11.08.2022 அன்று பிரதிவாதிகளால் D.D. ரூ.3,71,786/—க்கு 12.09.2022 அன்று வழங்கப்பட்டது. 31.08.2022 வரை பிரதிவாதி செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத்தொகையானது ரூ.5,34,959/—. எனவே, மேற்படி ரூ.3,71,786/—க்கான D.D. வாதிகள் தரப்பில் பாதகம் இல்லாத வகையில் பெறப்பட்டு இந்நீதிமன்றத்தில் நமூனா தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினம் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி நமூனாவின் நகலானது பிரதிவாதிக்கும் சார்பு செய்யப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 2022 வரை ரூ.1,63,173/— நிலுவையாக உள்ளது என்பது பிரதிவாதிகளுக்கு நன்கு தெரியும். ஆனால், அதற்கு பிறகு பிரதிவாதிகள் பணம் எதுவும் செலுத்தவில்லை. செப்டம்பர் 2022 முதல் மார்ச் 2023 வரை ரூ.77,000/— செலுத்த வேண்டியுள்ளது. மொத்தமாக நிலுவை தொகையானது ரூ.2,40,173/— ஆகும். அவ்வாறிருக்க பிரதிவாதிகள் 10.04.2023 அன்று D.D. மூலமாக ரூ.88,000/— செலுத்துவதாக நமூனா தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், உண்மையில் அப்போதைய நிலுவை தொகையாக ரூ.2,40,173/—. எனவே, மார்ச் 2023 வரையிலான காலத்திற்கு D.D. மூலமாக ரூ.88,000/— செலுத்தியதாக சொல்வது தவறானது. எனவே, மேற்படி D.D. ஆனது பாதகம் இல்லாத வகையில் வாதிகளால் பெறப்பட்டது. எனவே, பிரதிவாதிகளால் செலுத்த வேண்டிய மொத்த தொகையான ரூ.2,95,173/—ல் மேற்படி பிரதிவாதி செலுத்திய ரூ.88,000/— போக ரூ.2,07,173/— நிலுவையாக உள்ளது. எனவே, மேற்படி நிலுவைத்தொகையை பிரதிவாதிகள் ரூ.2,07,173/—ஐ செலுத்த வேண்டியுள்ளது என்பது தெரிய வருகிறது. ஆனால், மேற்படி பிரதிவாதிகள் மேற்படி நிலுவைத்தொகையை செலுத்த எவ்வித விருப்பமும தெரிவிக்கவில்லை. எப்படியிருப்பினும் மேற்படி பிரதிவாதிகள், வாதிகளுக்கு நிபந்தணைகள் விதிக்கவோ, விதி முறைகளை கூறவோ உரிமையில்லை. மேலும், வாதிகள் வாடகைக்காக குத்தகைக்காரை பின் தொடர வேண்டிய அவசியம் இல்லை. பிரதிவாதிகள், வாதிகளுக்கு எதிராக செயல்பட்டு

வேண்டுமென்றே வாடகை செலுத்துவதை தவிர்த்தனர். சுருக்கமாக சொன்னால் மனுவானது நிலைக்கத்தக்கதல்ல. எனவே, இம்மனுவானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. தற்போது இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

7. இம்மனுவின் மனுதாரர்கள் ஓ.எஸ்.எண்.102/2019–ல் பிரதிவாதிகள் ஆவர். மேற்படி பிரதிவாதிகளுக்கு எதிராக மேற்படி அசல் வழக்கானது தாவா சொத்தின் காலி சுவாதீனத்தை வாதிகள் வசம் எவ்வித வில்லங்கமின்றி ஒப்படைக்க வேண்டும் என்றும், வாடகை நிலுவைத்தொகையை செலுத்தக் கோரியும், மேற்படி வாடகை ஒப்பந்தம் முடிக்கப்பட்ட தேதியிலிருந்து சுவாதீனத்தை ஒப்படைக்கும் வரை மாதம் ரூ.10,000/– சேதாரமாக செலுத்தக் கோரியும் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கானது தற்பொழுது பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிப்பதற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மேற்படி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. இம்மனுவில் பிறப்பிக்கப்படும் உத்தரவானது அசல் வழக்கு முடியும் வரை தான் செல்லுபடியாகும். ஆனால், இவ்வழக்கு நிலுவையில் இருந்த போதே பிரதிவாதிகள் தரப்பில் பகுதி நிறைவாக இரண்டு முறை D.D. மூலமாக இந்நீதிமன்றத்தில் நமூனா தாக்கல் செய்யப்பட்டு வாதிகளுக்கு செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க இவ்வழக்கு முடியும் தருவாயில் உள்ளபோது, இம்மனுவை தாக்கல் செய்துள்ளது இவ்வழக்கை இழுத்தடிக்கும்

எண்ணத்தில் தான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

9. மேலும், மேற்படி மனுதாரர்கள் அவர்களது மனுவில் மேற்படி எதிர்மனுதாரர்கள், மனுதாரர்கள் வாடகை செலுத்தி வந்தபோது, எதிர்மனுதாரர்களின் வங்கி கணக்கை மூடி விட்டதாகவும், அதன்பின் காசோலை செலுத்தும்போது அதை வாங்க மறுத்து விட்டதாகவும் கூறியிருந்தாலும், பிரதிவாதிகள் தரப்பு வழக்குப்படி அவை 2019-ஆம் ஆண்டு கால கட்டத்தில் நடந்த சங்கதிகள். ஆனால், அதிலிருந்து இம்மனு தாக்கல் செய்யும் வரை பிரதிவாதிகள் இதுபோன்ற எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் தற்பொழுது வழக்கு விசாரணை முடிவுறும் தறுவாயில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது இவ்வழக்கின் விசாரணையை காலம் கடத்துவதாக உள்ளது.

10. மேலும், பிரதிவாதிகள் இதற்கு முன்பு D.D. மூலமாக வாதிகளுக்கு வாடகை நிலுவைத்தொகையை செலுத்தியபோது அதை பெற்றுக்கொள்ள வாதிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. எனவே, இறுதி கட்டத்தில் உள்ள இவ்வழக்கு முடிவுறும் வரை இதே நடைமுறையை பின்பற்றுவதில் மனுதாரர்களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படப்போவதில்லை. எனவே, இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதில்லை என்று தீர்மானிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இறுதியாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை

நீக்கம் செய்யப்பட்டு இன்று 2024–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15–ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
இ.ம.எண்.2/2023 இன்
மு.வ.எண்.102/2019
உத்தரவு நாள். 15.02.2024